தினமணி

கட்டப்பட்டு 20 மாதங்கள் ஆகியும் தண்ணீர் திறக்கப்படாத மாம்பழத்துறையாறு அணை: விவசாயிகள் கவலை

- சு. பழனி -

First Published : 17 Jul 2012 01:51:06 AM IST



நாகர்கோவில்: கன்னியாகுமரி மாவட்டத்தில் மாம்பழத்துறையாறு அணை கட்டப்பட்டு 20 மாதங்கள் ஆகியும் தண்ணீர் திறக்காததால் விவசாயிகள் கவலையில் உள்ளனர்.

இம் மாவட்ட விவசாயிகளின் நீண்டகால கோரிக்கையை ஏற்று முந்தைய திமுக அரசு ரூ. 20.97 கோடியில் இந்த அணையைக் கட்டியது.

கல்குளம் வட்டத்திலுள்ள வில்லுக்குறி கிராமத்தில் ஆனைக்கிடங்கு என்ற இடத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே இந்த அணை கட்டப்பட்டது. பணிகள் 2007 மே மாதத்தில் தொடங்கி 29.11.10-ல் முடிந்தன. 30.11.10-ல் அணை திறக்கப்பட்டது.

அணையின் நீளம் 360 மீட்டர். நீர்மட்டம் 55 அடி. இங்கு 44.54 மில்லியன் கனஅடி நீரைத் தேக்கிவைக்க முடியும். அணைக்காக 50.21 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. அதில் 25.93 ஹெக்டேர் பட்டா நிலம், 24.28 ஹெக்டேர் வருவாய்த் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலம்.

அணை மூலம் 455.76 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்றும், மீதமுள்ள தண்ணீர் பத்மநாபபுரம் புத்தனாறு கால்வாய் மூலம் 450 ஏக்கர் நிலங்களுக்குப் பயன்படும் என்றும் பொதுப்பணித் துறையால் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த அணை கட்டப்பட்டதன் மூலம் பேச்சிப்பாறை அணை நீரை சிக்கனப்படுத்தி அதை மாவட்டத்தின் பிற பகுதிகளுக்குப் பயன்படுத்த முடியும் எனக் கூறப்பட்டது. ஆனால், அணை கட்டப்பட்டு 20 மாதங்கள் ஆகியும் இதுவரை தண்ணீர் திறக்கப்படவில்லை.

இதுகுறித்து மாவட்ட பூமி பாதுகாப்பு சங்கக் கூட்டமைப்புத் தலைவர் கே. பத்மதாஸ் கூறியதாவது:

அணை கட்டப்பட்டு 20 மாதங்களுக்கு மேலாகியும் தண்ணீர் திறக்கவில்லை. தண்ணீர் திறந்தால் இரட்டைக்கரை கால்வாய்க்கு தண்ணீர் வரும். இக் கால்வாயை நம்பி 300-க்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன.

இப்போது அணையில் 42.92 அடி தண்ணீர் உள்ளது. தண்ணீர் திறந்தால் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்து விவசாய நிலங்கள் பயன்பெறும்.

தண்ணீர் திறக்கக் கோரி விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் அதிகாரிகளிடம் பலமுறை வலியுறுத்தப்பட்டது. ஆனால் அணை திறக்கப்படவில்லை என்றார் அவர்.

இதுகுறித்து பொதுப்பணித் துறை நீராதாரப் பிரிவுப் பொறியாளர் ஒருவர் கூறும்போது, அணையில் தண்ணீர் திறப்பது குறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அரசின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

பேச்சிப்பாறை அணையில் நீர்மட்டம் குறைவாக உள்ள நிலையில், இந்த அணையில் இருந்து விரைவாக தண்ணீர் திறந்தால் பேச்சிப்பாறை தண்ணீரை ஓரளவுக்கு சிக்கனமாகப் பயன்படுத்த முடியும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

## தேங்காய் சுடும் குச்சிகளுக்கு மவுசு குறைந்தது

First Published : 16 Jul 2012 02:05:13 PM IST

சங்ககிரி, ஜூலை 15: ஆடி பண்டிகையையொட்டி விற்பனை செய்யப்படும் தேங்காய் சுடும் குச்சிகளுக்கு மவுசு குறைந்து வருகிறது. சங்ககிரியில் பல இடங்களில் தேங்காய் சுடும் குச்சிகள் குவிக்கப்பட்டிருந்தும் அந்த அளவுக்கு விற்பனை நடைபெறவில்லை.

ஒவ்வொரு வருடமும் ஆடி மாதம் முதல் தேதியன்று புதுமணத் தம்பதிகள் மணமகளின் பெற்றோர் வீட்டிற்குச் சென்று புத்தாடைகள் உடுத்தி தேங்காய்களை சுட்டு கோயிலுக்குச் சென்று விநாயகரை வழிபட்டு பண்டிகையைக் கொண்டாடுவது தமிழர்களின் வழக்கமாக இருந்து வருகிறது.

அதேபோல, கிராமங்கள், நகரங்களில் உள்ள சிறுவர்களும் ஆடி பண்டிகையான ஆடி முதல் தேதியன்று தேங்காய்களில் கண்களில் துளையிட்டு அதில் நாட்டுச் சக்கரை, அவுல், பருப்பு வகைகள் உள்ளிட்ட பொருள்களை செலுத்தி, பிறகு குச்சிகளை சொருகி ஒரே கூட்டமாகச் சுட்டு எடுத்துச் சென்று விநாயகரை வழிபடுவது வழக்கம்.

அந்த வகையில், இந்த வருடமும் அழிஞ்சில் குச்சிகளைக் கொண்டுவந்து செதுக்கும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து சங்ககிரி பழைய பேருந்து நிலைய வளாகம் முன் அழிஞ்சில் குச்சிகளை விற்பனைக்காக வைத்திருக்கும் சங்ககிரி அருகே உள்ள கிடையூர் பகுதியைச் சேர்ந்த கோபிநாத் கூறியது:

கடந்த மூன்று ஆண்டுகளாக இந்தக் குச்சிகளை விற்பனை செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளேன். கடந்த 15 நாள்களாகத் தோட்டங்களுக்குச் சென்று அதன் உரிமையாளர்களிடம் பேசி குச்சிகளை வெட்டி பத்திரப்படுத்தி இங்கு விற்பனைக்காகக் கொண்டு வந்துள்ளேன். வருடா வருடம் அதன் விற்பனை குறைந்து கொண்டு வருகிறது. ஏனெனில், நாட்டில் நாகரிகம் வளர வளர மக்கள் மத்தியில் குச்சிகளை பயன்படுத்தி தேங்காய்களை சுடும் ஆசை மறைந்து வருகிறது.

இப்போது எங்களுக்கு இதில் லாபம் கிடைப்பதில்லை என்றார் அவர்.

## தோட்டக்கலைத் துறை சார்பில் விவசாயிகளுக்கு இலவச கருவிகள்

First Published : 16 Jul 2012 10:51:18 AM IST

கோத்தகிரி, ஜூலை 15: நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை மற்றும் தேசிய தோட்டக்கலை இயக்கம் திட்டத்தின் மூலமாக, கோத்தகிரியில் உள்ள சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு இலவச கருவிகள் வழங்கப்பட்டன.

நுண் நீர் பாசனத் திட்டத்தின்கீழ், கீழ் கோத்தகிரி உள்கோட்டத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சிக்கு, ஊராட்சி ஒன்றிய தலைவர் கே.மனோகரன் தலைமை வகித்தார். தோட்டக்கலை இணை இயக்குநர் ஜி.மோகன் முன்னிலையில், முதல் கட்டமாக 11 விவசாயிகளுக்கு 100 சதவீத மானியத்தில் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள் வழங்கப்பட்டன.

தோட்டக்கலை துணை இயக்குநர் என்.மணி, உதவி இயக்குநர் கே.ராஜேந்திரன் மற்றும் விவசாயிகளும், பொதுமக்களும் கலந்துகொண்டனர். இதைத் தொடர்ந்து அனைத்து விவசாயிகளுக்கும் இக்கருவிகள் வழங்கப்பட உள்ளதாக, கோத்தகிரி தோட்டக்கலை உதவி இயக்குநர் கே.ராஜேந்திரன் கூறினார்.

## மண் மாதிரி பயிற்சி

First Published : 16 Jul 2012 10:47:15 AM IST

பவானி, ஜூலை 15: பவானியை அடுத்த குருப்பநாயக்கன்பாளையம் விதைப்பண்ணையில் மண் மாதிரி எடுத்தலும், அவசியமும் குறித்து விவசாயிகளுக்கு வெள்ளிக்கிழமை பயிற்சி அளிக்கப்பட்டது.

÷குருப்பநாயக்கன்பாளைம் விதைப் பண்ணையில் இரு மாதங்களுக்கு விவசாய நடைமுறைகள், அதிக மகசூல் பெறுதல் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெறும்.

முதல்கட்டமாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் மண் பரிசோதனை, நோக்கம், மண் மாதிரி எடுக்கும் இடங்கள், மண்மாதிரி எடுக்கும்போது தவிர்க்க வேண்டிய இடங்கள், எடுக்கும் காலம், முறைகள், நுண்ணூட்டச்சத்து ஆய்வு குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது.

வேளாண்மை அலுவலர்கள் ஜான் ஜோசப், ரவிச்சந்திரன் உள்பட குருப்பநாயக்கன்பாளையம், ஊராட்சிக்கோட்டை, தொட்டிபாளையம், செங்காடு பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

## விலை வீழ்ச்சியால் மரவள்ளி சாகுபடி குறைந்தது

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,01:17 IST

தியாகதுருகம் : அதிக விளைச்சல், விலை வீழ்ச்சி, புயல் பாதிப்பு ஆகியவற்றால் மரவள்ளி சாகுபடி செய்த கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் கடந்தாண்டு நஷ்டமடைந்தனர். இதனால், மாற்று பயிருக்கு மாறியதால் மரவள்ளி சாகுபடி வெகுவாக குறைந்துள்ளது.

2,000 ஏக்கர்

விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியில் ஆண்டுதோறும் 2,000 ஏக்கர் பரப்பில் மரவள்ளி சாகுபடி செய்து விவசாயிகள் லாபம் ஈட்டி வந்தனர். ஓராண்டு பயிர், பராமரிப்பு எளிது, அறுவடை பருவத்தில் கிழங்கை கொள்முதல் செய்பவர்களே கூலியாட்களை கொண்டு வெட்டி எடுத்து செல்வதால் சிரமம் குறைகிறது. இதனால் விவசாயிகள் பலரும் மரவள்ளி சாகுபடியில் ஆர்வம் காட்டினர். இங்கு விளையும் மரவள்ளி கிழங்குகள், சேலம் மாவட் டத்தில் உள்ள "சேக்கோ' பாக்டரிக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மரவள்ளி மாவிலிருந்து ஸ்டார்ச், சேமியா, மைதா உள்ளிட்ட உணவு பொருட் கள் தயாரிக்கப்படுகிறது.

விலை சரிவு

கடந்தாண்டு விவசாயிகள் பலரும் மரவள்ளி சாகுபடியில் ஆர்வமுடன் ஈடுபட்டனர். சேலம் மாவட்டத்திலும் விளைச்சல் அதிகரித்தது. இதன் எதிரொலியால், விலை கடுமையாக சரிந்தது.

மாட்டுக்கு தீவனம்

கடந்தாண்டு அறுவடை துவங்கும்போது 100 கிலோ, மரவள்ளி கிழங்கு மூட்டை 400 ரூபாய் வரை விற்றது. அடுத்தடுத்து அறுவடை செய்ததால் விலை சரிந்தது. இதனால் ஒரு மூட்டை 70 ரூபாய்க்கு சரிந்து வாங்க ஆளின்றி விவசாயிகள் பரிதவித்தனர். சிலர் கிழங்குகளை வெட்டி, உலர்த்தி மாட்டுக்கு தீவனமாக்கினர்.

பலத்த "அடி'

விலை வீழ்ச்சி ஒருபக்கம், டிசம்பர் மாதம் வீசிய "தானே' புயல் காரணமாகவும் மரவள்ளி செடிகள் உடைந்தது. மழையால் நிலத்தில் தண்ணீர் தேங்கி, மண்ணுக்குள்ளேயே கிழங்கு அழுகி வீணாகியது. அதிக எதிர்பார்ப்போடு மரவள்ளி சாகுபடி செய்த பெரும்பாலான விவசாயிகளுக்கு கடந்த ஆண்டு பலத்த "அடி' விழுந்தது.

மாற்றுப்பயிர்

இதனால் கள்ளக்குறிச்சி, சின்னசேலம், தியாகதுருகம், சங்கராபுரம், கச்சிராயபாளையம், ரிஷிவந்தியம் ஆகிய பகுதிகளிலும் மரவள்ளி சாகுபடியை இவ்வாண்டு விவசாயிகள் பலரும் தவிர்த்து, கரும்பு, மக்காச்சோளம் ஆகிய மாற்று பயிருக்கு தாவியுள்ளனர். இந்தாண்டு மரவள்ளி சாகுபடி பரப்பு குறைந்ததால், எதிர்பாராத விலை உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு, சில விவசாயிகள் கள்ளக்குறிச்சி பகுதியில் மரவள்ளி பயிரிட்டுள்ளனர்.

## 1,25,000 மெட்ரிக் டன் ராகி உற்பத்தி இலக்கு

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,03:22 IST

கருத்தை பதிவு செய்ய

ஓசூர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை பெய்ய துவங்கியுள்ளதால், விவசாயிகள் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் ராகி சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். ராகி பயன்பாடு பொதுமக்கள் மத்தியில் அதிகரித்துள்ளதால், நடப்பு ஆண்டு, ஒரு லட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் ராகி உற்பத்தி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஆண்டுதோறும் இறவை மற்றும் மானாவாரி சாகுபடியில் ராகி (கேள்வரகு) உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். தமிழகத்தின் மொத்த ராகி உற்பத்தியில் கிருஷ்ணகிரி மாவட்டம் முதலிடம் வகிக்கிறது. தற்போது மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளதால் கிருஷ்ணகிரி, தளி, தேன்கனிக்கோட்டை மற்றும் ஓசூர் தாலுகாவில், இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் தற்போது ஒரு லட்சத்து 25 ஆயிரம் ஏக்கரில் மானாவாரி ராகி விதைப்பில் ஈடுபட்டுள்ளனர்.

குறிப்பாக ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில் மட்டும் ஒரு லட்சம் ஏக்கரில் ராகி சாகுபடி துவங்கியுள்ளது. கடந்த காலத்தில் ஏக்கருக்கு 600 கிலோ மட்டுமே ராகி மகசூல் கிடைத்தது. கடந்த இரு ஆண்டாக உயர் விளைச்சல் ரகங்கள், புதிய தொழில்நுட்ப சாகுபடி முறையில் ஏக்கருக்கு இறவையில் 2 டன்னும், மானாவாரியில் ஒரு டன்னும் மகசூல் கிடைக்கிறது. தற்போது உடல் ஆரோக்கியத்தை கருத்தில் கொண்டு, பொதுமக்கள் மத்தியில் ராகி பயன்பாடு விழிப்புணர்வு அதிகரித்துள்ளது. அதனால், ராகியை பயன்படுத்தி ராகி கூழ், பிஸ்கட், ரொட்டி, பிஸ்கட், மால்ட், முறுக்கு, வடை, நிப்ட் உள்ளிட்ட 50 வகை உணவு பொருட்கள் தயாரித்து பயன்படுத்துகின்றனர். இதனால் ராகியின் தேவை முன்பை விட அதிகரித்துள்ளதால், நடப்பாண்டு மனாவாரி சாகுபடியில் வேளாண்மை துறை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மொத்தம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் மெட்ரிக் டன் ராகி உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளது.
இதுகுறித்து ஓசூர் வேளாண்மை இயக்குனர் நாகராஜ் கூறியதாவது:ராகியை பொறுத்தவரையில் 120 நாளில் அறுவடைக்கு வந்து விடுகிறது. ஏக்கருக்கு சாகுபடி செலவு 7,000 ரூபாய் ஆகிறது. இவ்வளவு குறைந்த சாகுபடி செலவில் குறைந்தப்பட்சம் 15 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது. மேலும், தற்போது உயர் விளைச்சல் ரகங்கள், ஜிபியூ-28, லட்சமன்-5, எம்.ஆர்-1, விதைகள் வந்துதாலும், உயர் தொழில்நுட்பத்தாலும் இரட்டிப்பு மகசூல் கிடைக்கிறது. இந்த புதிய சாகுபடி முறையால் ராகி செடி தூர் ஏராளமான கிளைகளுடன் வளர்கிறது. கதிர்கள் திடமாக கிடைக்கிறது. நோய் தாக்குதல் இருக்காது.
உடல் ஆரோக்கியம் மட்டுமில்லாது சர்க்கரை நோயாளிகளுக்கு, ராகி மிக சிறந்த இயற்கை மருந்தாக பயன்படுகிறது. இது தற்போது மக்கள் மத்தியில் நல்ல விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளதால் அதிகளவு உணவு பொருட்கள் ராகியில் தயாரிக்கப்படுகிறது. ராகி ஒரு குவிண்டால் 13 ஆயிரம் ரூபாய்க்கும், ஒரு கிலோ 13 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது. ராகியை பொறுத்தவரை விலை ஏற்ற, இறக்கமின்றி நிலையான லாபத்தை தருவதால், விவசாயிகள் ராகி சாகுபடியில் ஆர்வமாக உள்ளனர்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## தேங்காய் சுடும் குச்சி ரூ. 25க்கு விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,01:26 IST

கருத்தை பதிவு செய்ய
ஈரோடு: ஆடிப்பண்டிகை கொண்டாட, தேங்காய் சுட உதவும் குச்சி, 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது.
புதுமணத்தம்பதியர், ஆடி மாதம் முதல் நாளில் தேங்காய் சுடும் பண்டிகை கொண்டாடி மகிழ்வர். இந்நாளில், புதுமண தம்பதிகள், சிறுவர், பெரியவர் என, அனைரும் ஒன்று கூடி, வீட்டின் முன்பாக, மரக்குச்சிகளை தீயிட்டு கொழுத்துவர். தேங்காயில் ஒரு கண்ணை மட்டும் திறந்து,

அதனுள், பச்சரிசி, வெல்லம், கடலை, எள், தூளாக்கிய ஏலக்காய் உள்ளிட்ட பொருட்களை வைப்பர். அதன்பின், அளிஞ்சி குச்சியின் மூலம், ஓட்டையை அடைத்து, தீயில் வேக வைப்பர். புது மணப்பெண், புதிய தாலி கட்டி, சுட்ட தேங்காயை கோவிலில் நிவேதனம் செய்து, குழந்தைகளுக்கு கொடுத்து மகிழ்வர்.

ஆடி மாதப்பிறப்பான நேற்று, ஈரோடு பன்னீர்செல்வம் பார்க், மணிக்கூண்டு, கடைவீதி உள்ளிட்ட நகரின் முக்கிய இடங்களில், தேங்காய் சுடப் பயன்படுத்தும் அளிஞ்சி மரக்குச்சிகள் விற்பனைக்கு வைத்திருந்தனர். நேற்று காலை முதல் இவற்றின் விற்பனை சூடுபிடித்தது.

ஈரோடு கல்லுப்பிள்ளையார் கோவில் வீதி சேகர் கூறியதாவது:

காடு, மேடுகளில் அலைந்து திரிந்தால் மட்டுமே, அளிஞ்சி மரக்குச்சிகள் கிடைக்கும். கடந்தாண்டில் சிறிய குச்சிகள் ஐந்து ரூபாய்க்கும், பெரிய குச்சிகள், 10 ரூபாய்க்கும் விற்கப்பட்டது. குச்சியுடன், தேங்காய் சுடப்பயன்படும் தேங்காய், வெல்லம், பச்சரிசி, எள், கடலை, ஏலக்காய் போன்றவை விற்பனை செய்கிறோம். மதியத்துக்கு மேல், குச்சி விற்பனை சூடுபிடிக்கும். நடப்பாண்டில் இதே குச்சி ஜோடி, 25 ரூபாய்க்கு விலைபோகிறது. புது மணத்தம்பதிகளின் பெற்றோர் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.

## ஈரோடு மாவட்டத்தில் பரவலாக எட்டிப்பார்த்த மழை

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,01:26 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் நீண்ட எதிர்பார்ப்புக்கு பின், நேற்று முன்தினம் இரவு பரவலாக மழை பெய்தது.

ஈரோடு மாவட்டத்தில் கடந்த நான்கு நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று காலை, 8 மணி நிலவரப்படி, கோபி, 33 மி.மீட்டர், பெருந்துறை, 25, ஈரோடு, 25, சத்தியமங்கலம், 23, கொடுமுடி, 8, பவானி, 7.4, தாளவாடி, 2, பவானிசாகர், 1 மி.மீட்டர் மழை பதிவானது. கடந்தாண்டைவிட இந்தாண்டு மழை அளவு குறைந்துள்ளது. கடந்தாண்டு ஜூன் மாதம் சராசரியாக, 25.91 மி.மீட்டரும், ஜூலையில், 44.28 மி.மீட்டரும் மழை பெய்தது. இந்தாண்டு, ஜூனில், 14.34 மி.மீட்டரும், ஜூலையில், இதுவரை, 21.11 மி.மீட்டர் மட்டுமே மழை பெய்துள்ளது.

பொதுவாக, ஈரோடு மாவட்டத்தில், மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் பெய்யும் கோடை மழை சற்று குறைவாகவும், செப்டம்பர் மாதத்துக்குப் பின், அதிகளவில் மழை பெய்வது வழக்கம். கடந்தாண்டில், சராசரியாக ஆகஸ்ட் மாதம், 93.37 மி.மீட்டரும், செப்டம்பரில், 63.27 மி.மீட்டரும், அக்டோபரில், 182.98 மி.மீட்டரும், நவம்பரில், 376.42 மி.மீட்டரும், டிசம்பரில், 27.13 மி.மீட்டரும்

மழை பதிவானது.
நடப்பு, ஜனவரி, ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் குறிப்பிடும்படி மழை பதிவாகவில்லை. ஏப்ரலில், 62.98 மி.மீட்டரும், மே மாதம், 64.23 மி.மீட்டர் மட்டுமே மழை பதிவானது. இந்தாண்டு, "எல்நினோ' உட்பட பல்வேறு காரணங்களால் பருவமழை பொய்க்கும் என, ஆராய்ச்சி நிறுவனங்கள் தெரிவித்தாலும், இப்போது முதல் தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே குடிநீருக்கும், பாசனத்துக்கும் தண்ணீர் பஞ்சம் இல்லாமல் இருக்கும். தற்போதைய நிலையில், இம்மாவட்டத்திலும், இம்மாவட்டத்துக்கு நீராதாரமாக உள்ள மாவட்டங்களிலும் மழை பொய்த்து, அணைக்கு நீர் வரத்து குறைந்ததால், வறண்ட நிலை தொடர்கிறது.

## விலை உயர்வு எதிரொலியாக வெங்காயம் சாகுபடி அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,01:26 IST

கருத்தை பதிவு செய்ய
கோபிசெட்டிபாளையம் : வெங்காயம் விலை உயர்வு காரணமாக கோபி சுற்று வட்டாரத்தில் வெங்காயம் சாகுபடி அதிகரித்துள்ளது.
கோபி சுற்று வட்டாரத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, எல்.பி.பி., மற்றும் குண்டேரிப்பள்ளம் பாசனம் மூலம், 50 ஆயிரம் ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.
மஞ்சள், கரும்பு, மக்காச்சோளம், வாழை, நிலக்கடலை, நெல் போன்றவை அதிகளவில் பயிரிடப்படுகிறது. மஞ்சள், மக்காச்சோளம் ஆகியவற்றில் ஊடுபயிராக , வெங்காயம் பயிரிடப்படுகிறது. 2,000 முதல், 2,500 ஏக்கரில் வெங்காயம் தனியாக சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டு, வெங்காயம் கிலோ, 35 ரூபாய்க்கு விற்கப்படுவதால், வெங்காயம் ஊடுபயிராக சாகுபடி செய்வது அதிகரித்துள்ளது.
பங்களாபுதூர், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம், கொங்கர்பாளையம் பகுதிகளில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. 90 நாள் பயிரான வெங்காயம், தற்போது நன்கு விளைச்சலாகி உள்ளது.
விவசாயிகள் கூறியதாவது:
வெங்காயம், 90 நாள் பயிராகும். மஞ்சள் பயிருடன் ஊடுபயிராக வெங்காயம் பயிரிடப்படுகிறது. தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனப் பகுதியில் ஒரு மாதத்துக்கு முன் வெங்காயம் பயிரிடப்பட்டது. குண்டேரிபள்ளம் அணையில் ஏப்ரல் 1ம் தேதி பாசனத்துக்கு தண்ணீர் திறந்த போது, பங்களாபுதூர், வாணிப்புத்தூர், டி.என்.பாளையம் பகுதியில் வெங்காயம் பயிரிடப்பட்டது. தற்போது, அறுவடை தருணத்தை எட்டியுள்ளது.
ஒவ்வொரு ஆண்டும் வெங்காயம் நடவு நேரத்தில் விலை உயர்ந்து விடுவதும், அறுவடை

நேரத்தில் விலை வீழ்ச்சியாவதும் வாடிக்கையாக உள்ளது. வெங்காயம் விலையை ஒரே சீராக இருக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். வெங்காயம் தற்போது கிலோ, 35 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதே விலை நீடித்தால் விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

## இயற்கை கைவிரித்ததால் ஆரம்பமானது தண்ணீர் தகராறு!

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,01:18 IST

கருத்தை பதிவு செய்ய

ஈரோடு:"கீழ்பவானி பாசனத்தில் அரசு ஆணைகளுக்கும், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிராக நீர்ப்பாசன நிர்வாகம் நடக்கிறது' என, கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் நல்லச்சாமி குற்றம் சாட்டியுள்ளார்.

அவரது அறிக்கை:

கீழ்பவானி அணை, 1954ல், இரண்டு லட்சத்து 700 ஏக்கர் பாசனத்துக்காக கட்டப்பட்டது. அணை கட்டுவதற்கும், கால்வாய் வெட்டுவதற்கும், 10.5 கோடி ரூபாய் கீழ்பவானி பாசன விவசாயிகள், 20 ஆண்டுகளாக அபிவிருத்தி வரியாக அரசுக்கு செலுத்தி வருகின்றனர்.

அணையின் மொத்தக் கொள்ளளவு, 32.8 டி.எம்.சி.,யில் தேங்கியுள்ள இருப்பு நீரில், 0.6 டி.எம்.சி., மட்டுமே பழைய பவானி பாசனமான கொடிவேரி, காலிங்கராயனுக்கு உண்டு. மீதமுள்ள இருப்பு நீர் கீழ்பவானி பாசனத்துக்கு பாத்தியப்பட்டது.

நடப்பாண்டு ஏப்ரல், 15ம் தேதி கொடிவேரி அணை முதல்போக (நான்கு மாதம்) பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அப்போது, அணையின் நீர்மட்டம், 52 அடியாக இருந்தது. கொள்ளளவு ஐந்து டி.எம்.சி.,யில், 0.6 டி.எம்.சி., மட்டுமே பழைய பவானி பாசனத்துக்கு எடுத்திருக்க வேண்டும். அன்று, கீழ்பவானி பாசனத்தின் கணக்கில் இருந்த நீரின் அளவு. 4.4 டி.எம்.சி., இருந்தது. ஆனால், 2.2 டி.எம்.சி.,க்கும் மேல் தண்ணீரை பொதுப்பணித்துறை எடுத்து, பழைய பவானி பாசனத்துக்கு கொடுத்து விட்டது. தொடர்ந்து நீரைத் திறந்து விடப்படுகிறது. இது அரசு ஆணைகளுக்கும், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கும் எதிரானது.

கீழ்பவானி பாசனம், ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய மாவட்டங்களில் ஒன்பது தொகுதிகள் இருக்கின்றன. நடப்பாண்டு கோடை மழையும், பருவ மழையும் குறைந்ததால், பாசனப்பகுதியில் வறட்சி ஏற்பட்டுள்ளது. மாவட்டங்களில் பரவலாக குடிநீர் தட்டுப்பாட்டும் தலைகாட்டி வருகிறது. பழைய பவானி பாசன கால்வாய்களில், பவானி ஆற்றுக்கரைகளிலும் இறவைப் பாசனங்கள் உள்ளன. ஆகஸ்ட் முதல் டிசம்பர் வரை (ஐந்து மாதம்) பல்வேறு நிபந்தனைக்கு உட்பட்டு தண்ணீர் எடுத்துக் கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அனுமதியற்ற பாசனங்களுக்கு முன்னுரிமையும், ஆயக்கட்டு நிலங்களை ஓரங்கட்டுவதையும் ஏற்க முடியாது.

இதற்கு காரணமாக இருக்கும் பொதுப்பணித்துறை நிர்வாகம் மீது, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.
இதற்கு முன், 2003-04ம் ஆண்டு பவானிசாகர் அணை வறண்ட போது, கீழ்பவானி மற்றும் கொடிவேரி பாசன விவசாயிகளிடையே பெரும் தகராறு நடந்தது. நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. அதன்பின், அணையில் போதிய அளவு தண்ணீர் இருந்ததால் விவசாயிகள் அமைதி கடைபிடித்தனர். நடப்பாண்டு, அணை வற்றியுள்ள நிலையில், ஒரே மாவட்ட விவசாயிகளிடையே தண்ணீர் தகராறு ஏற்பட்டிருப்பது வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

## குன்னூர் தேயிலை ஏலத்தில் 20.82 லட்சம் கிலோ விற்பனை

பதிவு செய்த நாள் : ஜூலை 16,2012,23:36 IST

கருத்தை பதிவு செய்ய
குன்னூர் : குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கம் சார்பில், நடந்த 28வது ஏலத்தில் 20.82 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 15.29 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 5.53 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த வாரம் 90 சதவீத தேயிலை தூள் விற்பனையானது. சாதாரண இலை ரகத்துக்கு சராசரியாக ஒரு கிலோவுக்கு 58-62 ரூபாய் வரையிலும், உயர் ரகம் 90-125 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. சாதாரண டஸ்ட் ரகத்துக்கு 65 முதல் 67 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 100 முதல் 125 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது.
அதிகபட்சமாக ஹோம்டேல் எஸ்டேட் சி.டி.சி., டஸ்ட் ரக தேயிலை தூள் ஒரு கிலோ 151 ரூபாய்க்கு விற்பனையானது. சாம்ராஜ் எஸ்டேட் ஆர்தடக்ஸ் ரக தேயிலை அதிகபட்சமாக ஒரு கிலோ 208 ரூபாய்க்கு விற்பனையானது. கடந்த வாரம் தேயிலை விலையில், 2ரூபாய் விலை ஏற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த ஏலத்தில் ரஷ்யா மற்றும் பாகிஸ்தான் வர்த்தகர்கள் கலந்து கொண்டனர். உள்ளூர் வர்த்தகம் சுமாராக இருந்தது.
இந்நிலையில், வரும் வியாழன், வெள்ளி கிழமை நடக்கும் 29வது ஏலத்தில் 18.53 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு தயாராக உள் ளது. இதில் இலை ரகம் 13.54 லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 4.99 லட்சம் கிலோவும் அடங்கும்.

## பயிறுவகை விதைமாதிரிகளை பரிசோதனை செய்துகொள்ள விவசாயிகளுக்கு வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,03:48 IST

கருத்தை பதிவு செய்ய

திருநெல்வேலி :

நெல்லை விவசாயிகள் பயிறு வகை விதை மாதிரிகளை பரிசோதனை செய்துகொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விதைபரிசோதனை அலுவலர் முகமது காசீம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

பயிர் வளர்ப்பதற்கு ஏதுவான சூழ்நிலையில் விதையின் கரு முளைவிட்டு பின்னர் வளர்ச்சிக்குரிய இன்றியமையாத பாகங்கள் உருவாகி இயல்பான செடி வளர்வதற்குருய திறனே முளைப்புத்திறன் என்கிறோம்.

முளைப்புத்திறனில் இயல்பானது, இயல்பற்றது, கடினமானது, உயிரற்றது என நான்கு வகைப்படுத்தி சோதனை முடிவுகள் அறிவிக்கப்படும்.

இவற்றில், விதை உறைகளின் கடினத்தன்மை காரணமாக, நீர் உட்புக இயலாத காரணத்தினால் முளைவிடாமல் இருப்பது கடினவிதையாகும்.

பயறுவகை மற்றும் வெண்டை விதைகளில் இவை தனியே கணக்கிடப்பட்டு ஆய்வு முடிவு வழங்கப்படும். வயல்களில் முளைக்கும் சாத்திய கூறுகள் உள்ளதால் பயறு வகை மற்றும் வெண்டை விதைகளில் மட்டும் கடின விதைகளின் எண்ணிக்கையும், இயல்பான நாற்றுகளின் எண்ணிக்கையோடு சேர்த்து முளைப்புத்திறனைக் கொள்ள வேண்டும். எனவே விவசாயிகள் தற்போது அறுவடையாகி வரும் பயறு வகை, விதை மாதிரிகளை நெல்லை விதைப்பரிசோதனை நிலையத்திற்கு பரிசோதனைக்கு அனுப்பி முளைப்புத்திறன் பரிசோதனை மூலம் கடின விதைகளின் எண்ணிக்கையையும் அறிந்து கொள்ளலாம்.

இவ்வாறு அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.ள்ளலாம்.இவ்வாறு அவரது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சி**

பதிவு செய்த நாள் : ஜூலை 17,2012,03:20 IST

கருத்தை பதிவு செய்ய

ஸ்ரீவைகுண்டம் : கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி 4ம் ஆண்டு மாணவிகளின் செய்முறை பயிற்சி முகாம் நடந்தது.

ஸ்ரீவைகுண்டம் அதன் சுற்றுவட்டார பகுதிகளான புதுக்குடி கெட்டியம்மாள்புரம், பேரின்பபுரம், பொட்டல், சிவகளை, பத்மநாபமங்கலம் ஆகிய கிராமங்களில் நடந்த பயிற்சி முகாமில் கிள்ளிகுளம் வேளாண்மை பயிற்சி கல்லூரி மாணவிகள் அபிராமி, ஆயிஸா, வினோதினி, ஸ்யாம்ளாதேவி, சிவரஞ்ச னி, கலைவாணி, சந்தியவல் லி ஆகியோர் கிராமம் கிராமமாக

விவசாயிகளுக்கு தென்னைக்கு டானிக் வளங்குவது, நல்ல விதைப் பயிர்களை தேர்ந்தெடுக்கும் விதம், விதைநேர்த்தி, சூடோமோனாஸ், ஃபுளூரசன்ஸ் கரைத்தல், திருந்திய செம்மை நெல் சாகுபடி, நாற்றங்கால் தயாரிக்கும்முறை, நடவு செய்தல், துளை மேலாண்மை, காளாண் வளர்ப்பு பற்றிய செய்முறை பயிற்சி ஆகிய பயிற்சி முறைகளை விவசாயிகளுக்கு நேரடியாக வயல்காட்டில் செய்து காண்பித்தனர். விவசாயிகள் கணபதி, ரவி, ஏடிஎம்ஏ.,உறுப்பினர் பிச்சையா, மேரிவைலட், பேரூர் சிவஞானவேல், பத்மநாபமங்கலம் முத்துசாமி, கெட்டியம்மாள்புரம் இராஜகோபால், பொட்டல் மதிவாணன் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

---

தினகரன்

மழையின்மை, வறட்சியால் நிலத்தடி நீர் மட்டம் சரிவு

பதிவு செய்த நேரம்:2012-07-17 10:18:05

கோவை, : நிலத்தடி நீர்மட்டம் 40 மீட்டருக்கும் கீழ் சென்று விட்டது. குளம், கிணறு, ஆழ்குழாய்களில் வறட்சி நீடிக்கிறது.

கோவை மாவட்டத்தில் நடப்பாண்டில் மிக குறைந்த அளவை மழை பெய்துள்ளது. கடந்த மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் கடும் வெயில் வாட்டியது. கோடைக்கு பிறகு தென் மேற்கு பருவ மழை பெய்யும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சில நாள், சில பகுதியில் மட்டும் தூறல் மழை பெய்தது. குறிப்பாக மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டியுள்ள ஆனைமலை, மதுக்கரை, தொண்டாமுத்தூர், காரமடை, மேட்டுப்பாளையத்தில் 5 முதல் 10 மி.மீ மழை மட்டுமே பெய்தது. தற்போதும் கோடை சீசன் போல் கடும் வெயில் நீடிக்கிறது. இந்நிலையில் கோவை மாவட்ட பொதுப்பணித்துறை நிலத்தடி நீர் மட்ட பிரிவினர் கடந்த மாதம் முழுவதும் 237 கிணறுகளின் நீர் மட்டம் தொடர்பாக ஆய்வு நடத்தினர். இதில் 43 கிணறுகள் முற்றிலும் நீரின்றி வறண்டு கிடப்பது கண்டறியப்பட்டது. நிலத்தடி நீர் மட்டம் 50 மீட்டர் ஆழத்திற்கும் கீழ் சென்று விட்டது. கடந்த ஆண்டு ஜூன் மாதத்துடன் ஒப்பிடும் போது நீர்வளம் மிக்க ஆனைமலை, பொள்ளாச்சி தெற்கு, வடக்கு ஒன்றியம், வேட்டைக்காரன் புதூர், ஜமீன் ஊத்துக்குழி பகுதியிலும் நிலத்தடி நீர் மட்டம் 10 மீட்டர் வரை குறைந்து விட்டது. பல்லடம், சுல்தான் பேட்டை, சூலூர், அரசூர், கணியூர், நீலம்பூர், கருமத்தம்பட்டி, சாமளாபுரம் வட்டாரத்தில் நிலத்த டி நீர் மட்டம் 70 அடிக்கும் கீழ் சென்று விட்டது.

தொண்டாமுத்தூர், மதுக்கரை, பெரியநாயக்கன்பாளையம், துடியலூர் பகுதியிலும் 40 முதல் 55

மீட்டர் ஆழத்தில் தண்ணீர் கிடைக்கிறது.
நரசாம்பதி, கொலராம்பதி, செல்வாம்பதி, குமாரசாமி, செல்வசிந்தாமணி, குறிச்சி, வெள்ளலூர், வாலாங்குளம், சிங்காநல்லூர், கண்ணம்பாளையம் உட்பட 27 குளங்கள் முற்றிலும் வறண்டு விட்டது. உக்கடம் பெரியகுளத்தில் மட்டுமே 10 சதவீத நீர்தேக்கம் உள்ளது. கடந்த காலங்களில் நகர்ப்பகுதியில், குறிப்பாக குளங்களை ஒட்டியுள்ள இடங்களில் 20 முதல் 30 மீட்டர் ஆழத்தில் நிலத்தடி நீர் மட்டம் காணப்பட்டது. தற்போது நிலத்தடி நீர் மட்டம் 40 மீட்டருக்கும் கீழ் சென்று விட்டது.
தென்மேற்கு பருவமழை காலத்தில், நிலத்தடி நீர் மட்டம் 20 மீட்டருக்கும் இருக்கும்.
ஆனால் மழை நீர் தேக்கம் இல்லாததால் வறட்சி கடுமையாகி விட்டது. இதே நிலை நீடித்தால் நிலத்தடி நீர்மட்டம் மேலும் 5 முதல் 10 மீட்டர் சரிய வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## பரிசோதனை அலுவலர் தகவல் விதை முளைப்பு திறன் அறிந்து பயிரிட்டால் அதிக மகசூல்

பதிவு செய்த நேரம்:2012-07-16 12:38:37

காஞ்சிபுரம், : காஞ்சிபுரம் விதை பரிசோதனை அலுவலர் இனியன் வெளியிட்டுள்ள அறிக்கை: சம்பா பருவ நாற்றங்கால்விட தயாராக உள்ள விவசாயிகள், 400 கிராம் அளவுள்ள நெல்விதை மாதிரிகளை எடுத்து, காஞ்சிபுரம் விதை பரிசோதனை நிலையத்தில் கொடுக்க வேண்டும். அங்கு விதை பரிசோதனை செய்து முளைப்பு திறன் அறிந்து பயிரிட்டால் அதிக மகசூல் பெறலாம். எனவே, விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையம், காஞ்சிபுரம் என்ற முகவரியில் கொடுத்து பரிசோதனை செய்து பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பதிவு செய்த நேரம்:2012-07-17 10:43:49

பெரம்பலூர், :  பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 19ம் தேதி நடக்கிறது.
பெரம்பலூர் கலெகடர் தரேஸ் அஹமது வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்ககும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 19ம் தேதி நடக்கிறது. கூட்டத்தில் வேளாண் சம்மந்தமாக நீர்பாசனம், கடன் உதவி, இடுபொருட்கள், இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத்திட்டங்கள் பற்றிய குறைபாடு பற்றி விவாதிககப்படுகின்றன. எனவே பெரம்பலூர் மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும்

விவசாய சங்க பிரதிநிதிகள் குறைதீர் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

---

## குறுவை நெல் சாகுபடியில் அதிக மகசூல் பெற புதிய தொழில்நுட்பம் வேளாண் அதிகாரி ஆலோசனை

பதிவு செய்த நேரம்:2012-07-17 10:19:01

நாகை, : நாகை மாவட்டத்தில் தற்போது மயிலாடுதுறை, செம்பனார்கோவில், சீர்காழி உள்ளிட்ட பகுதிகளில் பம்புசெட் பாசனம் மூலமாக குறுவை நெல் சாகுபடி தொடங்கி நடந்து வருகிறது. குறுவையில் விவசாயிகள் புதிய சாகுபடி தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம்.

சான்று பெற்ற விதைகளை வாங்கி பயன்படுத்துவதாக இருந்தாலும், சொந்த விதைகளை பயன்படுத்துவதாக இருந்தாலும், விதைப்பதற்கு 2 நாட்களுக்கு முன் கண்டிப்பாக இளம் வெயிலில் காலை 11 மணிக்கு முன்னர் அல்லது மாலை 3 மணிக்கு பின்னர் ஒரு மணி நேரம் காய வைத்து, விதைகளை விதைப்பதற்கு அரை மணி நேரத்திற்கு முன்னதாகவோ அல்லது விதைகளை நீரில் ஊறவைக்கும் போதோ, சூடோமோனாஸ் புளோரோசென்ஸ் என்ற நன்மை செய்யும் உயிர் எதிர் பாக்டீரியாவை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

நாற்றங்காலில் விதையை நெருக்கமாக இடாமல் பரவலாக இட்டால் வாளிப்பான நாற்றை பெறலாம். 14 நாள் வயதுடைய இளம் நாற்றுகளை நடவு செய்தால் அதிக தூர் உருவாகும். வயலில் வரப்பு ஓரங்களில் உள்ள நிழல் தரும் மரங்களை அகற்ற வேண்டும். வயல் மற்றும் வரப்புகளை களைகள் இன்றி சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும்.

இதனால் பூச்சி மற்றும் எலிகளின் தாக்குதலை கட்டுப்படுத்தலாம். டி வடிவ குச்சி மற்றும் ஏக்கருக்கு 10-20 எண்ணிக்கையில் தென்னை மட்டை கொண்டு பறவை பந்தல் அமைப்பதால் பூச்சி மற்றும் எலிகளை பிடித்து தின்னும் ரெட்டை வால் குருவி, ஆந்தைகளின் செயல்பாடுகள் அதிகரிக்கும்.

இயற்கை உரம் மற்றும் உயிர் உரங்களை பயன்படுத்துவதுடன் மண் மாதிரி ஆய்வு செய்து பயிருக்கு தேவையான அளவு ரசாயன உரத்தை பிரித்து இட வேண்டும். இதனால் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்தை பயிர் எடுத்துக்கொள்ளும். யூரியாவை வேப்பம் புண்ணாக்குடன் 5:1 என்ற விகிதத்தில் கலந்து குறுவை பயிருக்கு இடுவதால் பூச்சிகளை கட்டுப்படுத்தி, அதிக மகசூல்

பெறலாம்.

இத்தகவலை நாகை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

---

**தானியங்கள் விலை உயர்ந்துள்ள நிலையில், ஜூன் மாதத்தில் பணவீக்கம் 7.25 சதவீதமாக குறைந்தது**



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உற்பத்தி பொருள்கள் விலை குறைந்துள்ளதால், ஜூன் மாதத்தில் மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொது பணவீக்கம் ஐந்து மாதங்களில் இல்லாத அளவிற்கு 7.25 சதவீதமாக குறைந்துள்ளது. மே மாதத்தில் இது 7.55 சதவீதமாகவும், ஏப்ரல் மாதத்தில் 7.5 சதவீதமாகவும் (மறு மதிப்பீட்டின்படி) இருந்தது. பொருளியல் நிபுணர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் பணவீக்கம் குறைந்துள்ளது. இருப்பினும், பாரத ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டு அளவை காட்டிலும் இது அதிகமாகும்.*

*உணவு பணவீக்கம்*

*பொது பணவீக்கம் சற்று குறைந்துள்ள போதிலும், காய்கறி மற்றும் உணவு தானியங்கள் விலை மிகவும் உயர்ந்துள்ளது. ஓராண்டு கால அடிப்படையில் ஜூன் மாதத்தில் அரிசி மற்றும் கோதுமை விலை முறையே 6.70 சதவீதம் மற்றும் 7.46 சதவீதம், பருப்பு வகைகள் மற்றும்*

காய்கறி விலை முறையே 6.82 சதவீதம் மற்றும் 20.48 சதவீதம் உயர்ந்துள்ளது. இதனையடுத்து, பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 14.3 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள உணவு பணவீக்கம் ஜூன் மாதத்தில் 10.81 சதவீதமாக உயர்ந்துள்ளது. இது, மே மாதத்தில் 10.74 சதவீதமாக இருந்தது. 2011 ஜூன் மாதத்தில் இது 7.6 சதவீதமாகத்தான் இருந்தது. உணவு பொருள்கள் விலை தற்போது மிகவும் உயர்ந்துள்ளதை இது எடுத்துக்காட்டுகிறது.

தென் மேற்கு பருவமழை போதுமான அளவிற்கு இல்லாததால் உணவு தானியங்கள் உற்பத்தி குறையும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது. அதேசமயம், இவற்றின் கையிருப்பு போதுமான அளவிற்கு உள்ளது. ஆனால், சேமிப்பு கிடங்கு மற்றும் விநியோக வசதி நன்றாக இல்லாதததால், உற்பத்தியாகும் உணவு தானியங்களில் குறிப்பிட்ட சதவீதம் வீணாகிறது.

உற்பத்தி பொருள் பணவீக்கம்

ஜவுளி, ரப்பர், பிளாஸ்டிக் பொருள்கள், இரும்பு மற்றும் மெஷினரி உள்ளிட்ட உற்பத்தி பொருள்கள் பணவீக்கம் 5.02 சதவீதத்திலிருந்து 5 சதவீதமாக குறைந்துள்ளது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் இதன் பங்களிப்பு 64.97 சதவீதமாகும். எரிபொருள் பணவீக்கம் 11.53 சதவீதத்திலிருந்து 10.27 சதவீதமாக குறைந்துள்ளது. பொது பணவீக்கத்தை கணக்கிடுவதில் 20.12 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ள முதன்மை பொருள்கள் பணவீக்கம் 10.80 சதவீதத்திலிருந்து 10.46 சதவீதமாக குறைந்துள்ளது.

தொழில்துறை உற்பத்தி

கடனிற்கான வட்டி விகிதம் அதிகமாக இருப்பதால், கடந்த மார்ச் காலாண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஒன்பது ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 5.3 சதவீதமாக குறைந்தது. சென்ற மே மாதத்தில் நாட்டின் தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி 2.4சதவீதமாக உயர்ந்துள்ள நிலையிலும், நடப்பு நிதி ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் (ஏப்ரல் – மே) இதில் 0.8 சதவீதம் மட்டுமே வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே, கடனிற்கான வட்டி விகிதத்தை குறைக்க வேண்டியது அவசியமாகும் என பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், ஜூன் மாதத்தில் பொது பணவீக்கம் சற்று குறைந்துள்ளதால், பாரத ரிசர்வ் வங்கி இம்மாதம் 31–ந் தேதி வெளியிடும் பணக் கொள்கை ஆய்வு அறிக்கையில் முக்கிய கடன்களுக்கான வட்டியை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், உணவு பொருள் பணவீக்கம் அதிகமாக இருப்பது ஒரு சவாலாக இருக்கும்.

## ஏப்ரல்–ஜூன் மாத காலத்தில் வெங்காயம் ஏற்றுமதி 7.5 சதவீதம் வளர்ச்சி

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

சென்ற ஏப்ரல்–ஜூன் காலாண்டில் நாட்டின் வெங்காயம் ஏற்றுமதி 7.5 சதவீதம்

உயர்ந்துள்ளது.

குறைந்தபட்ச ஏற்றுமதி விலை ரத்து செய்யப்பட்ட நிலையிலும் வெங்காயம் ஏற்றுமதி அதிக அளவில் உயரவில்லை என்று விவசாய கூட்டுறவு அமைப்பான நேஃபட் தகவல் வெளியிட்டுள்ளது.

ஏற்றுமதியை அதிகரிக்கும் விதமாகவும் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையிலும் கடந்த மே மாதம் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை அரசு ரத்து செய்தது.

இருப்பினும், சென்ற ஜூன் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில் வெங்காயம் ஏற்றுமதி முந்தைய ஆண்டின் இதே காலாண்டு அளவை காட்டிலும் 32,000 டன் மட்டுமே உயர்ந்து 4,61,854 டன்னாக உயர்ந்துள்ளது.

ஏற்றுமதி ஒப்பந்தங்கள் ஏற்கனவே முடிவுக்கு வந்ததால், அதிக அளவில் வெங்காய ஏற்றுமதிக்கு வாய்ப்பில்லாமல் போனது. அதேபோல், குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை ரத்து செய்து வெளியிடப்பட்ட தாமதமான அறிவிப்பு, கப்பல்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு போன்றவற்றால் ஏற்றுமதிக்கான வாய்ப்புக்களை முழுவதுமாக பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை என மஹாராஷ்டிராவை சேர்ந்த வேளாண் பொருள் சந்தை அமைப்பின் தலைவரான ஜே.எஸ். ஹோல்க்கார் தெரிவித்துள்ளார்.

வளைகுடா நாடுகளுக்கும், வங்காளதேசம், இலங்கை, மலேஷியா மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து அதிக அளவில் வெங்காயம் ஏற்றுமதியாகிறது.